அலகு ரீதியான வினாத்தொகுப்பு

# எமது புராதன வாழ்க்கை முறை

வரலாறு **தரம்-07** **அலகு-01**

1. புராதன மக்களின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட மூன்று துறைகளை குறிப்பிடுக?
   - ✓ விவசாயம்
   - ✓ கைத்தொழில்
   - ✓ வர்த்தகம்
2. புராதன மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழில் எது?
   - ✓ விவசாயம்
3. விவசாயம் எவ்வாறான முறைகளில் மேற்கொள்ளப்பட்டது?
   - ✓ சேனைப் பயிர்ச்செய்கை (மேட்டு நிலம்)
   - ✓ நெற் பயிர்ச்செய்கை (சேற்று நிலம்)
4. சேனையில் பயிரிடப்பட்டவற்றை குறிப்பிடுக?
   - ✓ தானியங்கள்
   - ✓ மரக்கறிகள்
   - ✓ கிழங்குகள்
5. வெற்றிடத்துக்கு பொருத்தமான சொல்லை கொண்டு இடைவெளி நிரப்புக.




M.B.M.SAMRI

6. காட்டை தீயிட்டு கொளுத்திய பின்னர் துப்பரவு செய்துகொள்ளப்படும் நிலம் எவ்வாறு அழைக்கப்படும்?
   - ✓ சேனை
7. சேனையை **"சேன்"** என்று எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?
   - ✓ உம்மக்க ஜாதக
8. சேனை, கல்வெட்டுக்களில் எவ்வாறு அழைக்கப்பட்டுள்ளது?
   - ✓ பிட்டபிம்
9. எந்த மன்னனுடைய காலத்தில் **கிரி** என்ற குடியிருப்பில் **நிசல்வெட்டிய** கிராமத்தில் வாழ்ந்த ஐவர் சேர்ந்து சேனை செய்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
   - ✓ காவன் திஸ்ஸ மன்னன்
10. தீயிட்டு புதிதாக உருவாக்கிக் கொள்ளப்படும் நிலத்தை எவ்வாறு அழைப்பர்?
    - ✓ நவதெளிசேனை

11. சேனையில் பயிரிடப்பட்ட உலர் தானியப் பயிர்களை குறிப்பிடுக?
    - ✓ தினை
    - ✓ சாமை
    - ✓ குரக்கன்
12. சேனையில் பயிரிடப்பட்ட நெல் எவ்வாறு அழைக்கப்படும்?
    - ✓ கரைநெல்
13. கரைநெல் பேரளவில் விளைந்ததால் எம்மன்னனின் மகனுக்கு சாலிய குமாரன் என அழைக்கப்பட்டது? அது எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?
    - ✓ துட்டகைமுனு மன்னன்
    - ✓ சீஹலவத்து நூல்
14. "**சாலி**" என்பது எதனைக் குறிக்கின்றது?
    - ✓ கரைநெல்
15. சேனைப் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை குறிப்பிடுக?
    - ✓ வீச்சரிவாள்
    - ✓ மண்வெட்டி
    - ✓ அரிவாள்
16. விலங்குகளை விரட்ட எழுப்பப்படும் ஒலி எவ்வாறு அழைக்கப்படும்?
    - ✓ கினியாதிகாவ
17. பானையொன்றை தலையாக கொண்ட வெருளி எவ்வாறு அழைக்கப்படும்?
    - ✓ ஹெலிகடா
18. புராதன கல்வெட்டுக்களில் **வெவ்கமிக,வாவிகமிக** என அழைக்கப்பட்டவர்கள்?
    - ✓ குளங்களை அமைத்தவர்கள்/உரிமையாளர்கள்
19. மின்னேரிய வாவியை உருவாக்கிய மன்னன் யார்?
    - ✓ மகாசேன மன்னன்
20. மின்னேரிய தெய்வம் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?
    - ✓ மகாசேனன்
21. **போகங்களின்** வகைகளை தருக?
    - ✓ பெரும் போகம்
    - ✓ சிறு போகம்
    - ✓ இடைப் போகம்
22. தோணிகல கல்வெட்டில் போகங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
    - ✓ அகலஹஹஸ/பெரும் போகம்
    - ✓ பிடதடஹஸ/ சிறு போகம்
    - ✓ மெதஹஸ/இடைபோகம்
23. வயற்செய்கைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் எவை?
    - ✓ ஏர்
    - ✓ மட்டப்பலகை
    - ✓ அரிவாள்
    - ✓ மண்வெட்டி
24. வேளாண்மையை குவியலாக அடுக்கி வைத்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
    - ✓ வேளான்மைக்குதிர்/உட்பட்டிக் குவியல்
25. வேளாண்மையிலிருந்து நெல்லை வேறாக்குதல் எவ்வாறு அழைக்கப்படும்?
    - ✓ சூடடித்தல்
26. சூடடிக்க பயன்படுத்தப்பட்ட இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
    - ✓ களம்

M.B.M.SAMRI

27. பாலைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்பட்ட பசுக்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   - ✓ கிரிகெரி
28. நுகர்வு செய்யும் வரை நெல்லை பாதுகாப்பாக வைப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட முறை எவ்வாறு அழைக்கப்படும்?
   - ✓ நெற்குதிர்கள்
29. மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றிச் செல்லும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
   - ✓ தவளம் முறை
30. பசுவிலிருந்து பெறப்பட்ட பால்,தயிர்,மோர்,வெண்ணெய்,நெய் என்பன எவ்வாறு அழைக்கப்படும?
   - ✓ பஸ்கோரச
31. **கோபாலர்கள்** என அழைக்கப்பட்டவர்கள்?
   - ✓ மாடு வளர்ப்பவர்கள்
32. பண்டுகாபய மன்னன் பிள்ளைப்பருவத்தில் வாழ்ந்த கோபாலர்களின் கிராமம் எது?
   - ✓ தொரமடலாவ
33. பொருத்தமான விடைகளுடன் இணைக்குக.

| | |
|---|---|
| இரும்புத்தொழில் செய்வோர் | ரன்கருவன் |
| செப்புத்தொழில் செய்வோர் | லோகுரு |
| மட்பாண்டம் செய்வோர் | குயவர் |
| இரத்தினக்கல் பட்டை தீட்டுவோர் | மணிகர |
| ஆடை நெய்பவர்கள் | நெசவாளர் |

34. வர்த்தகத்தின் வகைகளை குறிப்பிடுக?
   - ✓ உள்நாட்டு வர்த்தகம்
   - ✓ வெளிநாட்டு வர்த்தகம்
35. அந்நிய நாடுகளுடன் நாட்டிற்கு வெளியே இடம்பெறும் வியாபார முறை?
   - ✓ வெளிநாட்டு வர்த்தகம்
36. பண்டங்களுக்கு பண்டங்களை மாற்றிக் கொள்ளும் வியாபார முறை?
   - ✓ பண்டமாற்று
37. புராதன காலத்தில் காணப்பட்ட வணிக நகரங்கள் இரண்டினை குறிப்பிடுக?
   - ✓ மகாகம
   - ✓ அநுராதபுரம்
38. இலங்கையில் முதன் முதலில் பாவனையிலிருந்த நாணயம்?
   - ✓ கஹபண
39. இலங்கையில் முதன் முதலில் பாவனையிலிருந்த நாணயத்தில் காணப்பட்ட உருவங்கள் எவை?
   - ✓ மரம்
   - ✓ யானை
   - ✓ சூரியன்
40. நகரங்கள் வரலாற்று மூலாதாரங்களின் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?
   - ✓ நிகம்
41. புராதன காலத்தில் வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் உருவாக்கிக்கொண்ட தனி அமைப்புக்கள் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?
   - ✓ புக

M.B.M SAMRI

42. புராதன காலத்தில் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து பல்வேறு தராதரங்களில் உருவாக்கிக்கொண்ட அமைப்புக்களை குறிப்பிடுக?
   - ✓ நானாதேசிகர்
   - ✓ வலஞ்சியர்
   - ✓ ஐநூற்றுவர்

43. முற்காலத்தில் வணிக கிராமங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   - ✓ பட்டுன்கம்

44. ஹோப்பிட்டிகம சந்தையில் ஏற்பட்ட முறைகேடுகளை ஒழிக்க எந்த மன்னனால் கல்வெட்டு உருவாக்கப்பட்டது?
   - ✓ 4 ஆம் உதய மன்னன்

45. சந்தையொன்றில் நிருவாகம் தொடர்பான சட்டதிட்டம் குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு எது?
   - ✓ பதுளை தூண் கல்வெட்டு

46. முற்காலத்தில் இலங்கை இரத்தினக்கற்களுக்கு பிரசித்தி பெற்றமையால் எவ்வாறு அழைக்கப்பட்டது?
   - ✓ இரத்தினத்துவீபம்

47. இலங்கையில் புராதன காலத்து துறைமுகங்களின் பெயர்கள் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   - ✓ மாதோட்டம் - மன்னார்
   - ✓ கோகண்ண - திருகோணமலை
   - ✓ கொடவாய - அம்பாந்தோட்டை

48. எம்மன்னனின் காலத்தில் ருவன்வெலிசாயவின் அலங்காரத்திற்கு தேவையான பொருட்களை கொண்டுவர உரோமபுரிக்கு தூதுவர்கள் அனுப்பப்பட்டனர்?
   - ✓ பாதிகாபயன்

49. மாடிகளையும் படி வரிசைகளையும் கொண்ட இலங்கைக்கு சொந்தமான கப்பல்கள் எந்த நாட்டு துறைமுகத்தில் காணப்பட்டது?
   - ✓ சீனத் துறைமுகத்தில்

50. எந்த மன்னனின் காலத்தில் பௌத்த சமயம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது?
   - ✓ தேவநம்பிய திஸ்ஸ

51. உழைப்புக்கு உழைப்பை மாற்றிக்கொள்ளும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
   - ✓ அத்தம் முறை

52. விவசாயியின் வேடம் பூண்டு வயலொன்றில் அறுவடைக்கு சென்ற மன்னன் யார்?
   - ✓ மகாசூலி மகா திஸ்ஸ

53. அரச மாளிகையில் சுவையான உணவு சமைத்ததாக சத்தர்மாலங்காரவில் குறிப்பிடப்படும் சாலிய இளவரசனின் மனைவி யார்?
   - ✓ அசோகமாலா

54. புராதன காலத்தில் சமையற் கலையில் சிறப்புப் பெற்ற பெண்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
   - ✓ மதுபாச்சிக்கா

55. எம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் பிணங்களை கொண்டு செல்ல புலையர்கள் 150பேர் நியமிக்கப்பட்டனர்?
   - ✓ பண்டுகாபயன்

56. எம்மன்னன் தனது தாயாருக்கு புரிந்த பணிவிடைகள் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?
   - ✓ எட்டாம் அக்கபோதி

M.B.M SAMRI

M.B.M SAMRI